விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆனி 26 துல்ஹஜ்ஜா 13 இதழ் 139

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 10-7-1987

## 6வது கப்பலுக்குப் பின் நிவாரணம் வேண்டாம்

### இலங்கை கோரப்போகிறது

[நமது நிருபர்]

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு நிவாரணப் பொருள்கள் கொண்டுவரும் 6-வது கப்பலுடன், நிவாரணப்பொருள்களுடன் கப்பல் எதையும் அனுப்ப வேண்டாமென இலங்கை அரசு இந்தியாவிடம் கேட்கவிருப்பதாக அரசாங்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் மூலமும், புதுடில்லியிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர்மூலமும் இத்தகவல் இன்று அல்லது நாளைய தினம் இந்திய அரசுக்கு அறிவிக்கப்படும் என்று மேற்படி பேச்சாளர் கூறினர்.

இந்தியா இதுவரை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியுள்ள உணவுகளைப்போல் இரண்டு மடங்கு உணவை இலங்கை அரசு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியுள்ளதாகவும் யாழ்ப்பாணத்தில் இப்போதுஉணவுத் தட்டுப்பாடு எதுவும் இல்லை என்றும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

மேலும் இந்தியக் கப்பல்களின் வருகையில் வேறு உள்நோக்கம் இருப்பதாக அரசாங்கக்கட்சிப் பாராளுமன்றக்குழுவிலும், தென்னிலங்கை மக்கள் மத்தியிலும் ஒரு கருத்து ஏற்பட்டிருப்பதுவும் மேற்படி இலங்கை அரசின் நடவடிக்கைக்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

## வடமராட்சியில் 4 நாள் ஊரடங்கில் படையினர் ஷெல் தாக்குதல்

# ஆலயம், கல்லூரி, வீடு சேதம்

# சிதைந்த சடலங்களும் மீட்பு!

## 90 சத வீதமான மக்கள் வெளியேற்றம்

(நமது நிருபர்)

**வடமராட்சிப் பகுதியில் கடந்த நான்கு தினங்களாக முழுநேர ஊரடங்குச்சட்டத்தை அமுல்செய்திருந்த படையினர், தொடர்ந்து தமது முகாம்களிலிருந்து மேற்கொண்டுவந்த பாரிய ஷெல் தாக்குதல்களால் பலர் பலியாகியும், பலர் படுகாயமடைந்துமுள்ளனர்.**

**மேலும் ஷெல் தாக்குதல்களால் வடமராட்சிப்பகுதியிலுள்ள பல வீடுகள், ஆலயங்கள், கல்லூரிகள் சேதமடைந்துள்ளதுடன் அப்பகுதியைச்சேர்ந்த தொண்ணூறு சதவீதமான மக்கள் உணவுப்பஞ்சம், அச்சம் காரணமாக வெளியேறியுள்ளனர்.**

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் வடமராட்சியிலுள்ள பத்து முகாம்களிலிருந்தும் படையினர் வெளியேறுதவகையில் பாரிய எதிர் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுஇவ்வாறிருக்க, நெல்லியடிப் பகுதியில் இராணுவத்தினர் தொடர்ச்சியாக நடத்திய ஷெல் தாக்குதலில் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயம், திருஇருதயக் கல்லூரி, கன்னியாஸ்திரிமடம் என்பன சேதமடைந்துள்ளன.

ஷெல் தாக்குதலில் பலியானவர்களில் நால்வரின் சடலங்கள் புனித அந்தோனியார் ஆலயத்திலும், ஒருவரின் சடலம் திரு இருதயக்கல்லூரியிலும், மற்றொருவரின் சடலம் கரவெட்டி தபால் நிலையம்

(6-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி அகதிகளுக்கு உடனடி நிவாரண ஏற்பாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

நெல்லியடிப் பகுதியிலிருந்து வெளியேறி தென்மராட்சிப் பகுதியில் அகதிகளாகத் தஞ்சம்புகுந்த மக்களுக்கு உடனடி நிவாரண உதவி வழங்குவதற்கான ஏற்பாடுகளை யாழ். செஞ்சிலுவை சங்கம் செய்துள்ளது.

தென்மராட்சியில் சாவகச்சேரிப் பகுதியில் தஞ்சமடைந்துள்ள சுமார் ஐயாயிரத்துக்குமதிகமான மக்களுக்கு இந்த உடனடி நிவாரண உதவி வழங்கப்படவுள்ளது.

யாழ் சமூக சேவைப் பகுதி உதவிப் பணிப்பாளர் திருமதி சிவசிதம்பரம், சாவகச்சேரி உதவி அரசாங்கஅதிபர்,யாழ். செஞ்சிலுவைச் சங்க தலைவர் திரு இ. பாலசுப்பிரமணியம் ஆகியோர் இந்த அகதிகளின் நிலையை நேரில் சென்று பார்வையிட்டபின்பே இந்த உடனடி நிவாரண உதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிவாரண உதவியுடன் இந்திய நிவாரணப் பொருள்கள் சிலவும் இவர்களுக்கு மேலதிகமாக வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வா)

## வடமராட்சியை சேர்ந்த 3 பெண்களும் 14 ஆண்களும் புறக்கோட்டை விடுதியில் கைது

(கொழும்பு)

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த 17 பேர், புறக்கோட்டைப்பகுதியிலுள்ள தனியார் விடுதிகளில் தங்கியிருந்த பொழுது பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் தனியார்விடுதி

[6ம் பக்கம் பார்க்க]

## ஆவரங்கால் சிவன் கோவிலில் தஞ்சம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமராட்சிப்பகுதியிலிருந்து ஏராளமானமக்கள் அகதிகளாக வெளியேறியவண்ணமுள்ளனர்.

அங்கு நிலவும் பதற்ற நிலை காரணமாக வெளியேறிய எராளமான மக்கள் ஆவரங்கால் சிவன் கோவிலில் தஞ்சமடைந்துள்ளனர்.

இணுவில் மற்றும் அதையடுத்த பகுதிகளிலும் சுமார் 100 வடமராட்சி குடும்பங்கள் அகதிகளாக வந்து தங்கியுள்ளன. (மா-நி)

## ஆந்திரா — ரயில் விபத்தில் 50 பேர் பலி!

[புதுடில்லி]

ஆந்திராபிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற ரயில் விபத்தொன்றில் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட ரயில் பயணிகள் பலியானார்கள், பலர் காயமடைந்தனர்.

புதுடில்லி நோக்கி வந்துகொண்டிருந்த மேற்படி 'ஹைதராபாத் நிஸாமுதீன் தக்ஸன் எக்ஸ்பிரஸ்' மன்சேரியலுக்கும் - மந்தமாரைக்கும் இடையில் மதகு ஒன்றைக் கடக்கும் போது வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு ஆற்றில் இரு பெட்டிகள் தூக்கி எறியப்பட்டன

ரயில் பாதையிலிருந்தும்

(6-ம் பக்கம் பார்க்க)

குகன் ஸ்ரோர்ஸ்

யாழ்ப்பாணம் 180, ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவந்த

குகன் ஸ்ரோர்ஸ்

வாடிக்கையாளர்களின் நலன்கருதி பாதுகாப்பான

புதிய இடத்திற்கு

இன்று (10-07-1987) முதல்

மாற்றப்பட்டுள்ளது.

புதிய முகவரி:-

குகன் ஸ்ரோர்ஸ்

18, மின்சாரநிலைய வீதி,

(யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்க

கிளை நிலையம் செயற்பட்ட கட்டடம்,

பெரியாஸ்பத்திரிக்குப் பின்புறம்)

யாழ்ப்பாணம்.

[சி-1907]

## களனி பல்கலைக்கழக — துணைவேந்தர், விரிவுரையாளர் கடத்தப்படுவர் என எச்சரிக்கை

(கொழும்பு)

களனி பல்கலைக்கழக துணைவேந்தரையும், விரிவுரையாளர்களையும் ஊழியர்களையும் கடத்தப் போவதாக களனி பல்கலைக்கழக மாணவர்கள் எச்சரிக்கை கடிதமொன்று அனுப்பியுள்ளதாக அறியப்படுகின்றது.

இலங்கையில் சிறைகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் பட்டதாரி மாணவர்கள் எதுவித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் இல்லையேல் இந் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படுமென்று அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்தாம்.

இதேவேளை ஜே. வி. பி. இயக்கத்துடன் தொடர்புடையவர்களெனும் சந்தேகத்தின் பேரில் தென்பகுதி பல்கலைக்கழகங்களிலிருந்து சுமார் 120 பட்டதாரி மாணவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் களனி பல்கலைக்கழக மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பிடவை சிமாட்டி 531, பலாலி றோட், திருநெல்வேலி, யாழ். பல்கலைக்கழக அருகாமையில் [சி9751]

பான்சி குட்ஸ் சிமாட்டி 158, நவீனசந்தை யாழ்ப்பாணம். [சி 9750]

சிங்கர் Zig Zag தையல் மெஷின் தமிழ் தட்டச்சு யந்திரம் உடன் விற்பனைக்குண்டு 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். சி-9763

புத்தம் புதிய ஜெசிக்கா (F X 7) கமராவும் நஷனல் (Flash) தொடர்பு:S. ஸ்ரீதரன் 41, ஜெயந்திநகால், சமயின் லேன், கொக்குவில் கிழக்கு. சி-9767

35 M.M. கமரா lens (Wide-angle-Tele) B S A Bantam minor (Standard Bore-Piston), இரட்டை அடுக்குக் கட்டில், T. V Case Stand, காமோறி இனபா ஆடுஇரண்டாம் ஈத்து, தொடர்பு கொள்க சபாநாயகம், 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். சி-9771

## விற்பனைக்கு

சகல விதமான திருமணப் பட்டுப் பிடவைகளுக்கும், றெடிமேட் ஆடைகளுக்கும், நம்பிக்கையான ஸ்தாபனம் கணேசன் ஸ்ரோர்ஸ், இல 11, கஸ்தூரியார் லேன். [கன்னு திட்டிக்கு அருகாமையில்] யாழ்ப்பாணம். ஏ-1904

எங்களிடம் சுத்தமான உழுந்தும் மா எந்நேரமும் விற்பனைக்குண்டு Trufood Grinders, 580, Hospital Road, Jaffna. (ஆஸ்பத்திரிக்கு முன்பாக). சு-9772

Broiler இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. K திருஅருட்சோதி, திருச்செல்வம் வீதி, பலாலி றோட், கோண்டாவில். (சி 9768)

Bairaha Farms Hisex பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் மாறை குஞ்சுகள், Hybro புரோயிலர் குஞ்சுகள் 10ந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும் பதிவு செய்க சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி கொக்குவில். (சி 9687)

## விற்பனைக்கு

உரித்த புரோயிலர் கோழி இறைச்சி, கறிக்கோழி இறைச்சி, பன்றிஇறைச்சி [பண்ணையில் வளர்க்கப்பட்டது] என் பனவற்றை எமமிடம் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேடகழிவுகள் வழங்கப்படும். வரணி மிசன் விற்பனை நிலையம், 145, நவீன சந்தை, யாழ்ப்பாணம் சி-9778

சகலவிதமான பாவித்த வீட்டுத் தளபாடங்கள் தேக்கு கட்டில், சோகேஸ், மெத்தைகள், அல்மாரி, தையல்மெஷின், கசற் றேடியோ, பித்தளைப் பொருள்கள், சாப்பாட்டு மேசை.Rice Cooker, ஹோல் செற், Office மேசை, Dressing Table சாதாரண மேசைகள் மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். [சி-9764]

## தேவை

ஜென்ஸ் ரெயிலரிங் வேலையில் அனுபவமுள்ள ரெயிலர்கள் தேவை. பாதிக்கப்பட்டோர் இடம் பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை தரப்படும். ஜெகபதி காம் ரெக்ஸ், மானிப்பாய், அந்தோனியார் கோவிலடி. சி-9777

அனுபவம் உள்ள வானொலிப் பெட்டிகள் பழுது பார்க்கும் தொழில்நுட்ப வல்லுநர்கள் [Technicians] தேவை இவர்கள் காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரைக்குள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். "ரேலிக் கோணர்", நவீன சந்தை, சாவகச்சேரி. (சி—9765)

## பயிற்சி

ரெலிவிஷன், வீடியோடெக் றிப்பெயறிங் எலக்றிக்கல் வயறிங், றிவைண்டிங் பயிற்சிகள் கூடியநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப் படும். ஆரம்பம் 13 - 07 - 87 Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, [றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். சி-9761

## கல்வி

Graduate Teachers Training மூன்றுவருட பட்டதாரி ஆசிரியர் பயிற்சி [வெளிவாரி பல்கலைக்கழக சான்றிதழும் கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும் வழங்கப்படும்]. தகைமைகள்: க. பொ. த. [உயர்தரம்] 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலதிகவிபரங்களுக்கு காரியாலயத்துடன் 11-07-87 இற்கு முன் தொடர்பு கொள்ளவும் அதிபர், உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். சி-9769

## அகதிகளுக்கு அன்பளிப்பு

[நெல்லியடி]

கரவெட்டிப்பகுதியில் உள்ள அகதிமுகாம்களுக்கு விநியோகிப்பதற்காக மிருசுவில் பங்குத்தந்தை வண பிதா எஸ். அமிர்தகுமார் 40 மூடைமா 10 மூடை மைசூர்ப்பருப்பு 10 மூடை சீனி ஆகியவற்றை கரவெட்டிப் பங்குத்தந்தை வண. பிதா ஆர். எச். சகாய நாயகஅடிகளாருக்கு அனுப்பியுள்ளார்.

இதேவேளையில் நெல்லியடிப் பிரஜைகள் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க பருத்தித்துறை ப. நோ. கூ.சங்கம் 15 மூடை அரிசி, 20 மூடை மா ஆகியவற்றை அகதிகளுக்கென வண பிதா சகாயநாயக அடிகளா ரிடம் ஒப்படைத்துள்ளது.

## வகுப்புக்கள்

ஆகஸ்ட் 16ம் திகதி நடைபெறவிருக்கும் ஆசிரியர்தெரிவு போட்டிப் பரீட்சைக்கான 1 மாதகால துரிதபயிற்சிவகுப்புக்கள் ஆரம்பம்: 11-07-87 பாடநெறி, பொது அறிவும் பொதுஉளச்சார்பும் பல ஆசிரியர்களின் இணைந்த சேவை. கட்டணம் ரூபா 100/- மட்டுமே. தொடர்பு: அஸ்ரன் இன்ஸ்ரிரியூட், 101/10, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [சி-107]

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி யோ. புனிதராணி [நவாலி தெற்கு மானிப்பாய்].

தோற்றம்: 15-06-54
மறைவு: 02-07-85
திதி: 10-07-87

ஆண்டுகள் இரண்டு அகன்றதேயம்மா
அன்பான உன்முகம்அகல்வதற்கில்லை
அன்புடன் எம்மை நீ ஆதரித்தாயே
ஆறுதலின்றி நாம் அலறுகின்றோமே.
அஞ்சலி செய்து உமது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் அன்புச் சகோதர, சகோதரிகள்
நவாலி தெற்கு, மானிப்பாய்.

சி-9776

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி செந்தாமலர் சிவசுப்பிரமணியம்

தோற்றம்: 16-03-1926
மறைவு: 05-07-1982
திதி: 10-07-1987

கடமை, கண்ணியம்,கட்டுப்பாடு என்ற கொள்கையே கருத்தாகக் கொண்டு கண்ணை இமை காப்பது போல எம்மை காத்து வளர்த்து ஆளாக்கிய எம் தெய்வமே.
வாழ்க்கையில் துன்பம் ஒரு பாதி இன்பம் மறுபாதி. ஒரு பாதியை பூமியில் அனுபவித்துவிட்டு மறுபாதியை சுவர்க்கத்தில் அனுபவிக்க இறைவன் அழைத்துக் கொண்டானோ? ஆருதம்மா எம் உள்ளம்.
உங்கள் ஆசைக்கனவுகள் நனவாகவும் உங்கள்நினைவுடனேயே காலமெல்லாம் வாழ்ந்திடுவோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
"நிதி இல்லம்"
மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.

சு-9722

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## யாழ். கலை மன்றம்

கலைமன்ற மாணவிகள் அனைவரும் வெள்ளிக்கிழமை (10-07-87) மாலை 3-30மணிதொடக்கம் 5-30மணிவரை வழமைபோல் வகுப்புகள் நடக்கும் இடத்திற்கு தவறாது சமூகம் தரவும்.

திருமதி யோகானந்தம்

[சி-9770]

## இடமாற்றம்

தற்போதைய சூழ்நிலை காரணமாக வாடிக்கையாளர்கள் ஆதரவாளர்கள் அன்பர்கள் ஆகியோரின் தற்பாதுகாப்புக் கருதி எமது ஸ்தாபனத்தை 10--7-87 முதல் இடமாற்றம் செய்துள்ளோம்.


புதிய இடம்

### பெஷன் ஹவுஸ்

571, கே. கே. எஸ், வீதி,
யாழ்ப்பாணம்.

(மனோகரா தியேட்டர் - நாவலர் வித்தியாலயத்திற்கு அருகில்) [ஏ 1905]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



ச. காசிப்பிள்ளை
கிளை முகாமையாளர்
மானிப்பாய் ப. நோ. கூ. சங்கம்.

கா. கலாவதி
மருந்தாளர்
S. P. சாமி & கம்பெனி
யாழ்ப்பாணம்

அன்பின் திருவுருவாய் அறிவின் ஒளிச்சுடராய், அழகின் உறைவிடமாய் பண்பின் இருப்பிடமாய் பலரும் மதித்திட எங்கள் குல விளக்குகளாய் திகழ்ந்த இள நெஞ்சங்களே, எவராயிருந்தாலும் மனம் மகிழ்ந்து உதவ்புவீர் பாசமிகு தோட்டமதில் பூத்திருந்த இருமலர் - நீர், பாதியிலே உதிர்ந்துவிட்ட மாய மென்ன? மகளினதும் மருமகனினதும் ஆத்ம சாந்தி வேண்டும்.

திரு. திருமதி. கந்தையாவும் குடும்பத்தினரும், ஆனைக்கோட்டை.

[சி 9774]


# LONDON EXAMS

(Nov./Dec. '87)

## ஆரம்பம்: 11-7-87

I. C. M. A. (Cima)
Stages I & II

A. A. T.
Prelim.

விரிவுரையாளர் குழு:
V. கருணாநிதி
S. P. சிவஞானம்
S. சிவபாலன்
மற்றும் பிரபல பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்

குறிப்பு: ஒவ்வொரு பகுதிக்கும் ஆகக் குறைந்தது 500 விரிவுரை மணித்தியாலங்கள் எடுக்கப்படும்

விபரங்களுக்கு:

## RAPID RESULT INSTITUTE

212, கச்சேரி – நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

[ஏ 111]

### மணிவாக்கு

மனதில் வன்முறை நிறைந்திருக்குமானால் அந்தப் பலவீனத்தை மறைப்பதற்கு அஹிம்சையென்ற போர்வையைப் பயன்படுத்துவதிலும் பார்க்க வன்முறையாளனாக விருப்பது மேலானது.

— மகாத்மாகாந்தி

## நமது நோக்கு

# அரசின் (அ)தர்ம சங்கடம்!

அண்மையில் நடைபெற்ற நெல்லியடித் தாக்குதல் அரசுக்கு சினத்தை ஊட்டியிருப்பதாகச் செய்தி.

அளவுகடந்த மகிழ்ச்சியின் மறுபக்கமே சினம். பருத்தித்துறைப் பெரு வெற்றியை அநுராதபுரத்தில் கொண்டாடிய அரச ராணுவத்துக்கு பின்பு கண்டதோல்வி - சினத்தை உண்டாக்கியிருக்கிறது

இந்த ஏற்றத்தாழ்வை இன்றைய கேடுகெட்ட போரில் அடிக்கடி காணலாம். அதன் கோரரூபம் யாழ் குடாநாட்டில் பூரணப்பட்டிருக்கிறது.

வள்ளுவம் எள்ளளவும் கலவாதபண்பு இன்றைய ஆட்சியின் தனிச்சிறப்பு. ஆட்சித்தலைவர்கள், அமைச்சர்கள், ராணுவ அதிகாரிகள் சினத்துக்கு ஆளாகி விட்டால் துவக்குப் பிடிக்கத்தெரியாத ராணுவ வீரர்கள் என்ன செய்யமுடியும்?

சினம் கொண்டவன் செயல் நிலத்தை அறைந்தவன் கை வலிப்பதுபோல் துன்பத்தில் முடியுமென்பது வள்ளுவம்.

மட்டுப் படுத்தப்பட்ட தாக்குதல் நடத்த முற்பட்ட பாதுகாப்பு அமைச்சர் பருத்தித்துறையில் இன்று வரைக்கும் தொடரும் அட்டூழியங்கள் பற்றி பெருமைப்படலாமா?

நெல்லியடியில் நடைபெற்ற பதிலடியை ஆயுதமாகக் கொண்டு எதிர்க்கட்சி லக்ஷ்மன் ஜெயக்கொடி செய்த கிண்டலை நாம் இரசிக்கவில்லை. ஆனால் அதில் இருக்கும் உண்மை அரசின் கண்ணைத் திறக்க வேண்டும்.

போரில் வெற்றி காண முடியாத நிலையில், அதுவும் வேறிடத்தின் உத்தரவில் போரை நிறுத்த வேண்டியிருப்பதால் பருத்தித்துறையில் இராணுவம் இருப்பதன் பயன் என்ன? அரசின் பலவீனத்தை அம்பலப்படுத்த எழுந்த கேள்வி இது.

இன்றைய இக்கட்டிலும் எதிர்கட்சிகள் அரசுக்கு நல்ல ஆலோசனை வழங்க முன்வரவில்லை.

அநியாயமாக அப்பாவி மக்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவிப்பதும், அவர்களைக் குடிபெயர்ப்பதும், அவர்களின் உடைமைகளை அழிப்பதும் ராணுவத்தின் முக்கிய தொழிலானால் போரில் வெற்றிகாண்பது எங்ஙனம்?

இந்தக் கருத்தை தென்பகுதி தலைவர்கள் எவரும் பாராளுமன்றத்திலேயோ அல்லது வெளியிலோ இதுகாறும் எடுத்துச் சொல்லவில்லை. அவ்வாறு சொன்னால் அரசுக்குண்டான தர்மசங்கடம் தீர வழி பிறக்கும்.

சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தவேண்டுமென்றே வடக்கில் நடைபெறும் கொடுமைகள் மறைக்கப்பட்டு வருகின்றன.

இனப் பிரச்னையையும் அதனால் உண்டான போரையும் அரசியல்லாபம் தேடித் திசை திருப்பும் நாடகம் இன்றும் நடைபெறுகிறது.

தமிழ் மக்கள் துன்பம் துடைக்க சிறிமாவோ அம்மையாரும் ஏனைய கட்சிகளும் முன்வராத நிலையில் அரசாங்கத்தின் சங்கடம் உலகனைத்திலும் பிரசித்தமாகிறது.

சினத்துக்கிடங்கொடாமல், தெளிந்த சிந்தையராகி சமாதான எண்ணம் நிலவுவதற்கு யாழ் குடாநாட்டிலிருந்து இராணுவம் அகற்றப்படவேண்டும்.

தமிழ்தீவிரவாதிகள் சமாதானத்துக்கு ஒருப்படவில்லையென்பது ஒருபோதும் முடிந்த முடிவாக இருக்க முடியாது அவர்களை பயங்கரவாதிகள் என்று வசைபாடுவதில் இன்பம் காண்பது அடிக்கடி துன்பத்துக்கு இடமளிக்கிறது.

பல்லாயிரம் இளைஞர்களை பூஸாவில் அடைத்து ஒரு சந்ததியையே பாழாக்கி விடுவதால் போரில் வெற்றியோ அல்லது பிரச்னைக்கு சமாதான தீர்வோ ஒருபோதும் ஏற்படுவதில்லை.

போரைத்தொடர்வது யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதென்ற முட்டாள்தனம், அரசின் ஆற்றாமையை நிரூபிக்கின்றது. நாட்டைப்பாதுகாக்க இத்தகைய இறுமாப்பு உடனடியாக முடிவடைவது அவசியம். இன்றேல் அதன் விளைவு நிலைமையை மோசமாக்குமென்பது திண்ணம்.

துப்பாக்கிப் பிரயோகத்தின் அரிச்சுவடி தெரியாத பலர் இராணுவத்தில் இருப்பதால் அதிபர் சிவராசா போன்ற பலர் இவ்வித கோழைத்தனத்துக்குப் பலியாகலாம்.

சினம் தோன்றக்காரணம் இருந்தும் அதனைச் செய்யாமல் தெளிந்த மனத்துடன் அஞ்சலியுரை நிகழ்த்திய உபவேந்தர் வித்தியானந்தன் அரசுக்குவிடுத்த சவால் நாட்டுமக்கள் அனைவரும் விழிப்படைய உதவட்டும்.

## முல்லைத்தீவில் மோட்டார்சைக்கிள் பாவனைக்கு தடை

[ஒட்டுசுட்டான் நிருபர்]

நாட்டின் 25 மாவட்டங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் கடந்த 84ல் இருந்து மோட்டார் சைக்கிள் பாவிப்பதற்கான தடை உத்தரவு தொடர்ந்து அமுலிலிருந்து வருகிறது.

## தாய்மார்கள் உண்ணாவிரதம்

(திருமலை நிருபர்)

திருகோணமலையில் கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை கோரி அவர்களின் தாய்மார்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

திருமலை காளிகோவில் முன்றலில் பெருந்திரளான தாய்மார்கள் உண்ணாவிரதமிருந்து வருகின்றனர்.

## சைவ சமயி

இலங்கையில் செய்த சைக்கிளிலும் பார்க்க வெளிநாட்டு சைக்கிள் என்றால் விசேட மதிப்பு. 'றலி' சைக்கிள் என்றால் அதற்கு வேறு அத்தாட்சியோ உத்தரவாதமோ தேவையில்லை. றலி சைக்கிள் போலவே ஒருவன் சைவசமயி என்றால் எல்லோர் மத்தியிலும் தனித்துவமான கௌரவம் இருக்க வேண்டும். சைவசமயம் என்றால் கொள்கையமைப்பில், தத்துவத்தெளிவில் ஏற்கனவே கௌரவமான சிறப்பு உண்டு. இச்சிறப்பு சைவசமயிகளுக்கு இல்லாமற் போனதற்குக் காரணம் சமய அறிவு, ஒழுக்கம் என்பன சைவ மக்களிடையே இல்லாமையே யாகும்.




பல சைவப்பிரமுகர்கள் வாய்ச்சொல் வீரராக இருக்க பலர் சமய அநுட்டானங்களில் அபிமான உடையவர்களானாலும் அவற்றில் முயற்சிக்காமையாலும் பலர் சைவக் கோட்பாடுகளுக்கு விரோதமாக நடந்து கொள்வதாலும் சைவசமயிகளைப்பற்றி பலரிடையே மதிப்பு ஏற்படாதிருக்கிறது.

பணக்காரரான சைவசமயிகள் தர்ம கைங்கரியங்களுக்கு செலவு செய்யத்தீர்மானிக்கும் முழுத்தொகையையும் அபிஷேகம், திருவிழா, திருப்பணி என்று செலவு செய்கின்றனரேயன்றி சராசரியாக சமூக சேவை ஜீவகாருண்யம் அடியார் பக்தி, சமய அறிவு விருத்தி முதலியவற்றுக்குச் செலவு செய்வதில்லை இதனால் சைவ சமயம் சமூகநலன, ஜீவகாருண்ணம் முதலியவற்றுக்கு உரிய சிறப்பை வழங்கவில்லை எனப் பலர்கருதுகின்றார்கள். இக்கருத்துக்குச் சைமக்களிடையே உள்ள அநாதை இல்லம், வயோதிபர் இல்லம் முதலியன நல்ல எடுத்துக்காட்டுகளாகும். இவை சிறப்பாக இல்லாமை மட்டுமன்றி இவற்றில் எல்லாச் சைவ மக்களும் தொடர்பும் அக்கறையும் கொள்ளாமை பெருங்குறையாகும்.

இது போலவே சமய சாதனைகளில் வளர்ச்சியடைந்த பெரியோர்களும், சான்றோரும், துறவியரும் சைவமக்களாகிய எம்மிடையே மிகக் குறைவாக இருக்கின்றன.

சிவபர ணபடன விதியில் நாவலர் எடுத்துக்காட்டியுள்ள 25 இலட்சணங்களை அடைய ஒவ்வொரு சைவசமயியும் முயன்றால் சைவசமயிக்கு மனிதசமுதாயத்தில் தனித்துவமான சிறப்பு ஏற்படும்.

இரக்கம், பரோபகாரம் முதலிய பொதுக்குணங்களும் சிவபெருமானை நினைக்குந்தோறும் கேட்கும் தோறும், பேசும் தோறும் உள்ளம் உருகிப் பரசமடைதல் முதலிய சிறப்புக் குணங்களும் ஒவ்வொரு சைவசமயிக்கும் அவசியம் இவை போன்ற பிறகுணங்களையும் உடையராகச் சைவமக்கள் முயலவேண்டும்.

மல்குக வேதவேள்வி
வழங்குக சுரந்துவானம்
பல்குக வளங்களெங்கும்
பரவுக அறங்களின்பம்
நல்குக வுயிர்கட்கெல்லாம்
நான் மறைச் சைவ
மோங்கிப்
புல்குக வுலகமெல்லாம்
புரவலன் செங்கோல்
வாழ்க.

—திருவிளையாடற்புராணம்

அருளாளன்

யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான

# முஸ்லிம் மாணவர்களுக்கு வேறு பல்கலைக்கழகங்களில் அனுமதி?

கொழும்பு, வியாழன் யாழ் பல்கலைக் கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள முஸ்லிம் மாணவர்களை நாட்டின் வேறு பல்கலைக் கழகங்களுக்கு இடமாற்ற உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அரசாங்க பாராளு மன்றக் குழுக் கூட்டத்தில் பல உறுப்பினர்கள் இப் பிரச்னை பற்றி பிரஸ்தாபித்திருந்தனர். இதனையடுத்தே மேற்படி உத்தரவை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதி உயர் கல்வி அமைச்சுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக் கழகத்தில் சகல துறைப் பீடங்களுக்கும் சுமார் நூறு முஸ்லிம் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

## தேவாலயம் சேதம்

ஊர்காவற்றுறை, வியா

நீண்ட நாட்களின் பின்பு காரைநகர் கடற்படைத் தளத்திலிருந்து ஏவி விடப்பட்ட 'ஷெல்' ஒன்று ஊர்காவற்றுறை சாந்தி மாதா தேவாலயத்தில் விழுந்து பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

## நல்லருள்செய் சிதம்பரனே

அன்பருக்கு அன்பனே! சித்தன்கேணி சிதம்பரேஸ்வரனே
சிவகாமி அம்பாள் சமேதரனே! ஈஸ்வரனே!
தேவர் துயர் தீர்க்க நஞ்சை உண்டவனே!
நாமும் துயர் போக்க நல்லருள் செய்திடுவாய்
முப்புரங்களை எரித்தவனே! முக்கண்ணனே!
மூவுலகமும் ஆள்பவனே! பரமேஸ்வரனே!
மகாசங்காபிஷேக நாயகனே! மகேஸ்வரனே!
உன்னைச் சரணடைந்தோம் எமைக்காத்திடுவாய்.

கௌரி கணேஷநாதன்

[இன்று 10-7-87 சித்தன்கேணி சிவன்கோவிலில் மகாசங்காபிஷேகம் திருக்கல்யாணம்]

## வைரவதேவா! கைகொடுத் தேயெமைக் காத்தருள்!!

ராகம்: சண்முகப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

கைதொழு தோம்நாம் வைரவ தேவா!
கைகொடுத் தேயெமைக் காத்தருள் நாதா!!
[கைதொ......]

அனுபல்லவி

தொல்லையைத் துடைத்திடும் சூலம்கைத் தரித்தவா!
வில்வையின் நீழலில் விருப்புடன் நிறைந்தவா!!
[கைதொ......]

சரணம்

துன்பங்கள் எங்களைத் துளைப்பதைப் பாராய்!
அல்லல்கள் எங்களை அலைப்பதைப் பாராய்!!
வெம்பகை வாழ்வையே வதைப்பதைப் பாராய்!
எம்கதை என்றுமே தொடர்வதோ? கூறாய்!!
[கைதொ......]

- "முருகு"

[இன்று 87-07-10 சாவகச்சேரி, கல்வயல் அருள்மிகு நேரணி வில்வத்து வைரவர் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் நடைபெறுகின்றது]

## மயிலியற் புலத்தில் மயிலேறி வருமுருகா

திருவேறு சரவணத்தில் செழுங்கருணை வடிவாகித்
தேனேறு கமல மலரில்
உருவாறு பெற்றுத் தவழ்ந்திட ஓராறு
மகளிர்பால் ஊட்டும் அழகா
கருணைபொழி கௌரிவந் தணைக்கவோர் உருவாகிக்
கனிமுந்தந் தருகந்தனே
தருவளர் சோலைசூழ் மயிலியற் புலமேவு
சரவண பவா அருள்வையே

எந்தமிழர் உயிருடல் உடமையாவும் அழித்
தினவெறி பிடித்து நிற்போர்
வந்தனைசெய் ஆலயங்களையுமழித் தார்க்கின்ற
வெங்கொடுமை பொறுக்கலாற்றாது
எந்தையே அகதியாய் ஏங்குகின்றோ முன்றன்
இணையடி தஞ்ச மென்று
சிந்தைக்கும் அரியனே திருமயிலியற்புலச்
சரவணபவா அருள்வையே

வந்தவினை தீர்த்திடும் வேலுண்டு மயிலுண்டு
வளர்கருணை முகங்கள் உண்டு
செந்தமிழர் அகதியாய்த் தேம்புகின்றோ முன்றன்
சிந்தைதான் உருகவிலையோ
சிந்துமநள் வேலேந்திச் சூர்கிளை தடிந்தமரர்
சிறைநீக்கி வைத்த முதல்வா
சந்ததம் காப்பதுன் கடன் மயிலைப்புலமேவு
சரவணபவா அருள்வையே.

கி. நெல்லிநாதன்
வட்டுக்கோட்டை.

இன்று அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமியார் கோயில் 9-ம் திருவிழா

# அடைக்கலம் சென்ற பிலிப்பைன்ஸ் முன்னுள் அதிபர் மார்க்கோஸ்

# ஹவாயிலிருந்து வெளியேற அமெரிக்கா தடை

## அக்கினே அரசைக் கவிழ்க்க முயற்சியாம்

மணிலா, ஜூலை—9

பிலிப்பைன்ஸில் திருமதி அக்கினேவின் ஆட்சியைக் கவிழ்க்கும் சதி நடவடிக்கையில் ஈடுபட்டதாக காரணம் காட்டி அந்நாட்டு முன்னுள்அதிபர் திரு. மார்க்கோஸை ஹவாய் தீவிலிருந்து வெளியேற அமெரிக்கா தடைவிதித்துள்ளது.

திரு. பேடினன் மார்க்கோஸ் அரசியல் புகலிடம் பெற்றுள்ள ஹவாய் தீவிலிருந்து இந்நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததை புலனுய்வு மூலம் கண்டுபிடித்த அமெரிக்கா தனது அரசின் சட்டப்படியே இந்த உத்தரவை பிறப்பித்ததாக ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் திரு சார்ள்ஸ் ரெட்மன் தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸில் கடந்த வருடம் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் பல தில்லுமுல்லுகளைச் செய்து மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற திரு. மார்க்கோஸ் முனைந்தபோதும் அது நிறைவேருது போய்விடவே அவர் அங்கிருந்துதப்பி அரசியல் புகலிடம் தேடி ஹவாய் சென்ருர்.

தற்போது மக்கள் ஆட்சி மலர்ந்துள்ள பிலிப்பைன்ஸில் அதிபர் திருமதி அக்கினேவை சதிப்புரட்சிமூலம் கவிழ்க்கும் பல இரகசிய நடவடிக்கையில் திரு. மார்க்கோஸ் ஈடுபட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச் சதிப்புரட்சிக்காக திரு மார்க்கோஸ் ஆயுதகம்பனி ஒன்றுடன் ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திட்டுள்ளார்.

இவற்றை புலனுய்வுசெய்த அமெரிக்க அரசு அவரை ஹவாய் தீவிலிருந்து வெளியேறக் கூடாதெனதடைவிதித்துள்ளது. [சி]

---

இந்துப் பயணிகள் படுகொலை எதிரொலி ——

# வட இந்திய மாநிலங்களில் சீக்கிய எதிர்ப்புக் கலவரம்!

## 6 பேர் பலி, 15 கடைகள் தீக்கிரை

புதுடில்லி, ஜூலை 9

பஞ்சாபிலும், ஹரியானுவிலும் இடம்பெற்ற இந்து பஸ் பயணிகள் படுகொலைச் சம்பவங்களையடுத்து வட இந்தியாவின் சில பகுதிகளில் சீக்கியர்களுக்கெதிரான வன்முறை அலைகள் எழுந்துள்ளன. இதில் 6 சீக்கியர் கொல்லப்பட்டனர். பதினைந்திற்கும் மேற்பட்ட கடைகள் தீக்கிரையாகின.

கடந்த இரு தினங்களில் இடம்பெற்ற பஸ் படுகொலையில் 72 இந்துப் பயணிகள் கொடூரமாக சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து வடஇந்தியாவில் இந்துக்கள் பெருமளவில் வாழும் ஹரியானு, உத்தரப் பிரதேஸ், இமாசலப் பிரதேஸ் புதுடில்லியில் சீக்கியர்களுக்கெதிரான வன்முறைகள் வெடித்தன.

இதனையடுத்து இப்பகுதிகளுக்கு உடனடியாக இராணுவத் துருப்புகள் பெருமளவில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும் கலவரங்கள் அதிகளவில் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1984-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பிரதமர் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டதையடுத்து புதுடில்லியில் ஏற்பட்ட சீக்கியர்களுக்கெதிரான கலவரங்களில் 2000த்திற்கும் அதிகமான சீக்கியர்கள் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. [சி]

உலகச் செய்திகள்

## திரிபுராவில் குண்டு வெடித்து 5 பேர் பலி!

புதுடில்லி, ஜூலை. 9

திரிபுராவில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தின் போது 5 பேர் பலியாகினர் என்றும் 20 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

---

இந்தியாவில் ஒவ்வொரு வருடமும்——

## தீ விபத்தின் அனர்த்தத்தில் 15,000 மக்கள் பலியாகின்றனர்

### –800 மில்லியன் டாலர் உடமை சேதம்

(புதுடில்லி)

இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் நிகழும் தீ விபத்துக்களில் சுமார் 15,000 பொது மக்கள் கொல்லப்படுகிருர்கள். 800 மில்லியன் டாலர் பெறுமதியான உடமைகளும் பொருள்களும் சேதமடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி புள்ளி விபரத்தை இந்திய தொழில்நுட்ப நிலைய பம்பாய் கிளை அறிவித்துள்ளது. இவ்வாருன விபத்துக்கள் கடந்த பல வருடங்களாக இந்தியாவில் இடம்பெற்று வருவதும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுவாக பல மாடிக் கட்டிடங்களில் இடம்பெறும் தீவிபத்துக்களை கட்டுப்படுத்தும் நவீன தொழில் நுட்பமோ மனிதவலுவோ இநதியாவில் இல்லையென்றும் இவ்விடயத்தில் அசட்டை போக்கை கடைப்பிடித்தால் இந்தியாவில் இவ்வாருன விபத்துக்கள் தவிர்க்கமுடியாது போய்விடுமென்றும் மேற்படி நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (சி)

---

அமெரிக்கப்பெண்களிடம் ———

## புற்றுநோயைப் பின்தள்ளும் 'எய்ட்ஸ்' நோய் மிரட்டல்

நியுயோர்க், ஜூலை 9

அமெரிக்காவில் இளம்பெண்களின் மரணத்திற்குரிய பிரதான காரணமாக இப்போது 'எய்ட்ஸ்' நோய் தோன்றியுள்ளதாக நியுயோர்க் சுகாதார திணைக்களம் புள்ளி விபரமொன்றை வெளியிட்டுள்ளது.

25 வயதிற்கும் 35 வயதிற்குமிடைப்பட்ட இளம் பெண்களின் மரணத்திற்கு காரணமாயுள்ள 'எய்ட்ஸ்' நோய் தற்போது புற்றுநோயை இரண்டாவது இடத்திற்கு தள்ளியுள்ளது.

இப்புள்ளி விபரப்படி, கடந்த வருடம் அமெரிக்காவில் 186 பெண்கள் 'எய்ட்ஸ்' நோயினுல் மரணமானுர்கள். 1985ல் 85 பேரே மரணமானுர்கள், இவ்வருடம் இத்தொகை பலமடங்காக அதிகரிக்கலாமென்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (சி)

---

## இன்றைய பலன்

மாதம்—ஆனி
திகதி—26 (10-7-1987)
கிழமை—வெள்ளி
திதி—சதுர்த்தசி
நட்சத்திரம்—மூலம்.

மேடம்: அமைதியான வாழ்வும் அமையும், தித்திக்கும் செய்தி கிட்டும், உள்ளத்தில் உவகை பிறக்கும்.

இடபம்:- ஆயுதபீடையுண்டு, அவசப் போக்கு அக்கினியாகிவிடும், கல்வித்துறையும் வீழ்ச்சி பெறலாம்.

மிதுனம்:- பேச்சு வன்மையால் புகழ்குவியும், தெளிந்த மனம். தேடியது கிடைக்கும்.

கடகம்:- எதிலும் விரக்தி மனப்பான்மை, கடமையிலும் கண்ணியம் தவறும், குடும்பத்திலும் முறிவு தோன்றும்.

சிங்கம்:- பிறர் ஆதரவுண்டு பொருள் வரவுண்டு, பொது சனமதிப்புமுண்டாம்.

கன்னி:- செய் தொழிலால் சிறப்புண்டு, வெளியிடத் தொடர்பும் பெருகும், பெரியோர் ஆதரவுமுண்டாம்.

துலாம்;- புதிரான வாழ்வும் கிட்டும். புதிய தொழில் விருத்தியுண்டு, வாகன வரவும் திருப்தியளிக்கும்.

விருச்சிகம்:-கருடப் பார்வை வட்டமிடும், கடன்படவும் நேரிடும், விஷபயமுண்டாம்

தனுசு:- தொழில் பதட்ட நிலை தோன்றும், பலவழிகளாலும் பணம் விரையமாகும், குடும்பத்திலும் பொறுமையை கடைப்பிடிக்கவும்.

மகரம்:- கல்வி நலன், கடமையில் உயர்வு, வாழ்விலும் அமைதி காண்பீர்கள்.

கும்பம்:- பிரச்னைகள் மேலும் சிக்கலாகலாம். கல்வி நிலை பாதிக்கப்படலாம், திருடர் பயத்திற்கும் இடமுண்டாம்.

மீனம்:- வாழ்க்கையில் நல்ல அபிவிருத்தி தென்படும், சிலருக்கு புதிய தொழில் வாய்ப்புக்கிட்டும், பணவருவாயுண்டாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

---

## மணிக்கோபுர கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி.

வட்டுக்கோட்டை சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மணிக்கோபுர கும்பாபிஷேகம் எதிர்வரும் 13ம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறும்.

இக்கும்பாபிஷேகம் சுன்னுகை ஸ்ரீ கதிரமலைச்சிவன் தேவஸ்தானம் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்களால் நடாத்தி வைக்கப்படும்.

இக்கும்பாபிஷேகக் கிரியைகள் 12ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை ஆரம்பமாகின்றன.

---

## ஆலயங்களில் உயிர்ப்பலியிட கண்டனம்

சுழிபுரம், வியா

அரசின் துன்பங்களும் தொல்லையும் நிறைந்துள்ள இக்கொடிய நாட்களில்உயிர்ப் பலிகள் ஆங்காங்கே நடைபெறுவது மிகவும் கண்டிக்கத்தக்க ஒரு செயலாகும் கருணை சீவகாருணியம் இல்லாமல் இறைவன் பேரில்நடை பெறும் இக்காரியங்கள் நிறுத்தப்பட வேண்டும் ஒவ்வொரு சற்சங்கியும் இதற்காகப் பாடுபட வேண்டும். இவ்வாறு பண்ணகம் சத்சங்க வட்ட பிரார்த்தனையின்போது வட்ட இயக்குநரால்கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

---

## திருமலையில் பாதயாத்திரை

(திருமலை நிருபர்)

செவன பாதயாத்திரை கடந்த ஞாயிறுக்கிழமை திருமலையில் இடம்பெற்றது. இதில் சுமார் 300 பேர் கலந்து கொண்டனர், திருமலை மாவட்ட ஐ. தே. க. அமைப்பாளர் திரு. வீ. ஆர். நவரத்தினராசா உட்பட மாவட்ட அமைச்சர், அரசாங்க அதிபர் ஆகியோருடன் சில ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

---

## தற்கொலை

பலாலி, வியாழன்.

தெல்லிப்பழை மாத்தனையை சேர்ந்த விசுவலிங்கம் உலகநாதன் (வயது 32) என்பவர் நச்சுதிராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்,

இவரது மரண விசாரணை தெல்லிப்பழையில் அரசினர் வைத்தியசாலையில் மரண விசாரணை அதிகாரி நா தம்பிராசாவினுல் நடாத்தப்பட்டு தற்கொலை என தீர்ப்பு அளிக்கப்பட்டது.

---

## யூரியா கலப்பினுல் ஏற்படும் பயன்கள்!

உடுவில், வியா.

வைக்கோலுடன் யூரியாவை கலந்து மாடுகளுக்கு கொடுப்பதன்மூலம் பிண்ணுக்கிற்காகும்செலவைமீதப்படுத்த முடியும். வரட்சிகாலத்தில் மாடுகளுக்குவேண்டியபுரதச்சத்தை இதன்மூலம் வழங்க முடியும். புரதக்குறைவால் ஏற்படும் பால்குறைவையும் நீக்கலாம்.

இவ்வாறு சுன்னுகம் கால்நடைவளர்ப்போர் சங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் டாக்டர் திருமதி எஸ். தனபாலசிங்கம் கூறினுர்.

சங்கத்தலைவர் திரு. பா. சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் டாக்டர் திருமதி எஸ். தனபாலசிங்கம் கால்நடைகளுக்கு வைக்கோலுடன்யூரியாகலந்து கொடுப்பதனுல் ஏற்படும்விளைவுகள்பற்றி எடுத்துக் கூறினுர்.

இக்கலப்பின் மூலம் மாடுகளுக்கு போஷாக்குத் தன்மை அதிகரிக்கும். சமிபாட்டுத் தன்மை ஏற்படும். உள்ளெடுக்கும் வைக்கோலின் அளவு அதிகரிக்கும் எனவும் கால்நடை வளர்ப்போர் வரட்சிக் காலத்தில் பாலைகுறைவின்றி பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் கூறினுர்.

வைக்கோலுடன் யூரியாவை எப்படிகலந்து போடுவதுஎன்பது பற்றி செயல் ரீதியாகவும் அவர் செய்து காண்யித்தார். செயலாளர் திரு. கே. செல்வக்குமாரனும் உரை நிகழ்த்தினுர். (மா)

---

கொழும்பு நகர் பகுதியில்——

## 10,000 குற்றவாளிகள் பற்றிய விபரங்கள் சேகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் இருந்தும் சுமார் 10,000 குற்றவாளிகள் பற்றிய விபரங்களும், புகைப்படங்களும் சேகரிக்கப்பட்டுச் சகல பொலிஸ் பிரிவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனுய்வுத்துறை அதிகாரி திரு. எம். சி. பிரசாத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விபரங்கள்பெறப்பட்ட குற்றவாளிகள் கொலை, கொள்ளை, பலாத்காரம், வழிப்பறி, பிக்பொக்கற் போன்ற சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டு வருபவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பற்றிய விபரங்களும். புகைப்படங்களும் கடந்த 11 வருடங்களில் கொழும்புப் பகுதியிலுள் 14 பொலிஸ் பிரிவுகளும் சேகரித்துள்ளன. குற்றவாளிகள் ஈடுபடும் சட்டவிரோத நடவடிக்கைகள் பற்றியும் வகைப்படுத்தி விபரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வீடுகளில் வேலை செய்பவர்கள் வாகன சாரதிகள் பற்றிய விபரங்களும் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## உடுவில் உ. அ. அதிபர் பிரிவில்
# 4000 அகதிகளுக்கு இந்திய நிவாரண உணவுப்பொருள்

(உடுவில் நிருபர்)

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான இந்திய நிவாரணப் பொருள்கள் வழங்கப் பட்டுள்ளன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் உள்ள அகதிகள் முகாமில் இந்திய நிவாரண உணவுப் பொருள்கள் வழங்கும் வைபவத்தை செஞ் செஞ்சிலுவைச் சங்கத்தின யாழ்ப்பாணக்கிளை முன்னாள் தலைவரான திரு. பி. எல். பற்றிக் ஆரம்பித்து வைத்தார்.

இந்திய செஞ்சிலுவைச்சங்க பிரமுகர் திரு வேணுகோபால் உட்பட வலிகாமம் தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. அ மகாலிங்கம் சுன்னாகம் பிரஜைகள் குழுத்தலைவர் திரு. மாணிக்கவாசகர், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தின்; சி குமாரவேலு மற்றும் பொதுத் தொண்டர்களும் நிவாரணப் பொருள்கள் வழங்குவதில் ஈடுபட்டிருந்தனர்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சுமார 4000 பேருக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டதாக உதவியரசாங்க அதிபர் அ. மகாலிங்கம் தெரிவித்தார்.

மா, சீனி, அரிசி, பருப்பு, எண்ணெய், பால்மா போன்ற பொருள்கள் வழங்கப்பட்டன. நிவாரணப் பொருள்கள் விநியோக ஒழுங்குகளை உதவியரசாங்க அதிபர் மேற்கொண்டார்.

இந்திய நிவாரண உணவுப் பொருள்கள் இயண்டாம் கட்ட விநியோகமும் விரைவில் நடைபெறும் என்றும் அப்போது எமது பிரிவுக்குட்பட்ட பல்வேறு கிராம சேவகர் பிரிவுகளில் இடம் பெயர்ந்து வசிப்பவர்களுக்கும் ஏழாலை வடக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும் என்றும் உதவியரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

(மா)

## ஆலயங்களில் உண்ணாவிரதம்

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் பகுதியிலுள்ள சகல ஆலயங்களிலும் உண்ணாவிரதப் பிரார்த்தனை நடைபெற்றது. சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்திலும் வழக்கம்பரை அம்பாள் ஆலயத்திலும் கம்பனை அம்பாள் ஆலயத்திலும் உண்ணாவிரதம் நடைபெற்றது.

விசேட அபிஷேக ஆராதனையும், கூட்டுப்பிராத்தனையும் நடைபெற்றது.

பெரும்தொகையான மக்கள் கூட்டுப்பிரார்த்தனையில் பங்கு கொண்டனர்.

# இலங்கையில் 2 லட்சம் பிள்ளைகள் பாடசாலை செல்லவில்லை

கொழும்பு)

இலங்கையில் சுமார் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பாடசாலை செல்லும் வயதுடைய பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதில்லை. பொதுவாக வறுமை நிலையே இதற்குக் காரணமெனப் புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கிறது.

பொதுவாக இப்பிள்ளைகளின் பெற்றோரும் வறுமை நிலை கருதி இவர்களைப் பாடசாலை செல்லுமாறும் கட்டாயப்படுத்துவதில்லை. பிள்ளைகளும் பாடசாலைகளுக்குச்செல்வதில்லை.

ஆசியாக் கண்டத்தில் இலங்கையின் கல்வித்தரம் இரண்டாவது நிலையிலுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

# மாவிட்டபுரம் பகுதிக்கு மக்கள் செல்ல இராணுவம் தடை

(மாவிட்டபுரம் நிருபர்)

மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளுக்குப் பொது மக்கள் செல்வது முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளுக்குப் பொதுமக்கள் சென்று வீடுகளைப் பார்வையிடவும், உடைமைகளை எடுத்துவரவும் சில தினங்கள் அனுமதியளித்துவந்த படையினர் தற்போது பொதுமக்களை அங்கு செல்ல அனுமதி வழங்க மறுக்கின்றனர்.

அப்பகுதியில் கேட்கும் துப்பாக்கிப் பிரயோகம், ஷெல் தாக்குதல் காரணமாகப் பொதுமக்கள் அங்கு செல்ல அஞ்சுகிறார்கள். பொதுமக்கள் எவரும் தற்போது அங்கு செல்வதில்லை.

## பயிற்சி வகுப்பு

[உடுவில் நிருபர்]

காங்கேசன்துறை - மானிப்பாய் வட்டார ஆரம்பபாடசாலை அதிபர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்புக்கள் இன்று முதல் 12ம் திகதி வரை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கல்விப்பணிப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் இவ்வகுப்புக்களை ஆரம்பித்து வைப்பார்.

காங்கேசன்துறை மானிப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரிகள் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

## நிவாரணப் பொருள்கள்

யாழ்ப்பாணம், வெள்

இந்திய நிவாரணப் பொருட்கள் சுன்னாகத்தில் ஐயனார் கோயில் திருஞான சம்பந்தர் வித்தியாலயம், கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம் (மருதனாமடம்) பொதுசன நூலகம் (இணுவில்) மக்கிளியோட் வைத்தியசாலை ஆகியவற்றிலுள்ள அகதிகள் முகாம்களுக்கும் பண்டத்தரிப்பில் ஜசிந்த பாடசாலை, பற்றிமா தேவாலயம், சென் மேரிஸ் தேவாலயம், அன்ரனி தேவாலயம் நிற்சாமம் பாடசாலை ஆகிய முகாம்களிலுள்ள அகதிகளுக்கு வழங்கப்பட்டன.

(ஒ)

## அதிபர் சிவராசா கொலை:
# "நாகரிக சமுதாயம் ஏற்காத மனிதாபிமானமற்ற செயல்"

யாழ்ப்பாணம், வெள்ளி

"இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் இளைஞர்களை மட்டுமன்றி பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொது மக்களையும் இராணுவத்தினர்சுட்டுகொலை செய்கிறார்கள். இந்நிலை தொடர்வதை எந்த மனிதாபிமான மனிதர்களும் நாகரீக சமுதாயமும் ஏற்றுக்கொள்ளாது."

இவ்வாறு இராணுவ தாக்குதலால் கொல்லப்பட்ட வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் மு. சிவராசா மறைவு குறித்து யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் வித்தியாலய உபஅதிபர் திரு. இராசதுரை தமதுரையில் குறிப்பிட்டார்.

அவர்தொடர்ந்து பேசுகையில் சிறந்த கல்விமானும் அதிபருமான அமரர் சிவராசாவின் இழப்பு கல்விஉலகுக்கும் தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகுமென்றார்

இவ்வஞ்சலியில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் தமது அஞ்சலியை தெரிவித்தனர். பாடசாலை கொடியும் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. பாடசாலை நண்பகல் 12 மணியுடன் மூடப்பட்டது [சி]

## திருமலை நகரசபையில் தமிழரில்லை

(திருமலை நிருபர்)

திருகோணமலை நகரசபைக்கு ஐ. தே. க. உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் இரண்டு முஸ்லீம்களைத் தவிர ஏனையோர் சிங்களவர். தமிழர் எவரும் இடம் பெறவில்லை.

## கட்டிட தொழிலாளர் சங்கம்

பண்டத்தரிப்பு நிருபர்

கட்டிட தொழிலாளர்கள் தற்போது சீமெந்து தட்டுப்பாட்டினால் அனுபவித்துவரும் கஷ்டங்கள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளுமுகமாக "சித்தன்கேணி கலைநகர் நேருஜி கட்டிடத் தொழிலாளர் சங்கம்" என்ற பெயரில் புதிய சங்கமொன்று அண்மையில் சித்தன்கேணியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் தலைவராக திரு. கே. வி. கனகசிங்கமும், செயலாளராக திரு. சு. பாலசிங்கமும், பொருளாளராக திரு அ. கந்தசாமியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## பிரதிஷ்டா வைபவம்

திருமலை வியாழன்

திருமலை கோணேசப் பெருமான் ஆலயத்தில் அமைந்துள்ள பரிவார மூர்த்திகளுக்குக் கடந்த வெள்ளி பிரதிஷ்டை வைபவம் நடைபெற்றது. அதிகாலையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பெருந்திரளான சைவ அன்பர்கள் பங்குபற்றினார்கள். திருமலையின் இராணுவ இணைப்பதிகாரி கேர்ணல் செனிவிரத்ன, அரசாங்க அதிபர் திரு. ஏ. ரி ஆரியரத்ன ஆகியோரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## பௌர்ணமி தின பாலர் கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,வெள்ளி

பௌர்ணமி தின பாலர் கல்விக் கருத்தரங்குத் தொடரில் ஐந்தாவது கருத்தரங்கு இன்று 10ம் திகதி வெள்ளிக்கிழமை காலை சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் கழகத் தலைவர் திரு. ஆ. செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் கலாநிதி கருணானந்தன் "பாலர் கல்வியும் கற்பித்தல் உபகரணங்களும்" என்னும் பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற முதலுதவிப் பரீட்சையில் சித்தி எய்திய ஆசிரியர்களுக்குச் சான்றிதள்களும் வழங்கப்படும்.

## மடுத்திருப்பதியின் மகத்தான திருவிழா

[மன்னார் நிருபர்]

மடுத்திருப்பதியின் நாயகியாக விளங்கும் மடுமாதவின் திருவிழா இம்முறை மிகவும் மகத்தானமுறையில் கோலாகலமாக நடைபெற்றது.

சென்றவருடம் ஆடித்திருவிழாவை விடஇம்முறை பக்தர் கூட்டம் அதிகரித்திருந்தது சுமார் 25000 பக்தர்கள் வந்திருந்தனர். தலைமன்னார், பேசாலை, தாழ்வுபாடு, மன்னார், வங்காலை, உயிலங்குளம், நானாட்டான், முருங்கன்போன்றபகுதி மக்களேகூடுதலாக வழிபாடுகளில் கலந்து திருவிழாவைச் சிறப்பித்தனர்.

மன்னார் மறைமாவட்ட தற்காலிக பரிபாலகரும் மறைமாவட்ட குருமுதல்வருமான அதிவண அ. சேவியர் குரூஸ் திருவிழா பாடல் பூசையை சககுருக்களுடன் சேர்ந்து நடாத்தினார். அவர் தனது மறையுரையில் இந்த இக்கட்டான சூழ்நிலையில்கூட மடுமாதாவின் அருளைப்பெற வந்திருந்த உங்களை மடுமாதா கைவிடமாட்டாள் என்றும் இறைவிசுவாசத்தை பரப்பி இறைமக்களாக வாழவேண்டுமெனவும்கூறினார். இறுதியில் மடுமாதாவின் திருச்சுருப பவனி இடம்பெற்றது.

பக்தர்களின் நலன் கருதி மன்னார் இ. போ. சபைசிறப்பானமுறையில் போக்குவரத்து வசதிகளை செய்திருந்தது.

மக்களுக்கு தேவையான தண்ணீர்வசதி சுகாதாரவசதி பொதுவசதிகள் மன்னார்அரச அதிபரின் பணிப்புரையின் பிரகாரம் ஒழுங்காக இருந்தன. இத்திருவிழா சிறப்புறஅமைய மடுத்திருப்பதியின் பரிபாலகர் வண பிதா செ. சூசைதாசன் குரூஸ் சகல ஏற்பாடுகளையும் செய்துவைத்தார்.

## விசேட நினைவுமலர்

பண்டத்தரிப்பு, வியா.

வண. ஜோசவ்வாஸ் அடிகள் இலங்கைக்கு விஜயம் செய்த 300ம் ஆண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டு விசேட நினைவு மலர் ஒன்றை சில்லாலை வண. ஜோசவ்வாஸ் நினைவு விழா செயற்குழு விரைவில் வெளியிடவுள்ளது.

இந்த நினைவு மலரின் இதழாசிரியராக வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி இருந்து மலரை சிறப்பாக அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

சில்லாலையிலுள்ள நான்கு தேவாலயங்களின் திருவுருவப் படங்கள் இந்த மலரின் முன் அட்டையில் இடம்பெற்றுள்ளதாகவும், கொழும்பு பேராயர் அதி. வண. நிக்கலஸ் மார்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை, யாழ். மறை மாவட்ட ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை, திருகோணமலை—மட்டக்களப்பு ஆயர்அதிவண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆகியோரினதும் மற்றும் கத்தோலிக்க ஆயர்களினதும் ஆசிச் செய்திகளும் கட்டுரைகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிய வருகினறது.

## நெடுங்கேணி
## வவுனியா வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

**28 ஸ்ரீ 1769**
**T. L. D. 53**
**இசுசு வான் பகிரங்க**

## ஏல விற்பனை

நெடுங்கேணி பல நோக்கு கூட்டுறவுச்சங்கக் காரியாலயத்தில் 1987ம் ஆண்டு ஆடி மாதம் 29ம் திகதி புதன் கிழமை 28 ஸ்ரீ 1769 இலக்க வாகனம்பகிரங்க ஏலத்தில்விற்பனை செய்யப்படும்.

மேற்படிசங்கத்திற்கு சொந்தமான பாவனையிலுள்ள 28 ஸ்ரீ 1769 இசுசு வாகனம் 29-07-1987 காலை 11-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். கொள்வனவு செய்யவிரும்புவோர் மேற்படி சங்கத்தின் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

ஏலம் கேட்கவிரும்புவோர் ரூபா 1000/- மீளளிக்கப்படும் வைப்புப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். மேற்கொண்டு தேவைப்படும் விற்பனை நிபந்தனைகளை அலுவலக நேரங்களில் சங்கத்தில் அறிந்துகொள்ளலாம்.

**பொதுமுகாமையாளர்**

சி132

## சிறுவர் பாடசாலை

[அராலி, வியா.

அராலி வடக்கு பாரதி சனசமூக நிலையத்தைச் சார்ந்த இளைஞர்களின் முயற்சியால் அப்பகுதியில் ஒரு சிறுவர் பாடசாலை அமைக்கப்படுகிறது.


இச்சிறுவர் பாடசாலை அமைப்பதற்கான ஒருபகுதி செலவினங்களை பாரதி கலாநாடக மன்றத்தினர் கொடுத்து உதவியுள்ளனர்.

## பளையில் ஆங்கில வகுப்புகள்

(யாழ்ப்பாணம்]

பளை மகாவித்தியாலயத்தில் கடந்த மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கில வகுப்புக்கள் வாரந்தோறும் வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் தொடர்ந்து நடைபெறுகின்றன. இதுவரை இவ்வகுப்புகளுக்குச் சமூகமளிக்காதோர் பளை மகாவித்தியாலயத்தில் இணைப்பதிகாரியைச்சந்திக்குமாறுகிளிநொச்சி கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**கந்தையா குமாரசாமி (குணரத்தினம்)**

மலர்வு: 19-08-1922
உதிர்வு: 10-06-1987

அன்புடனும் பண்புடனும் எம்மை வளர்த்து எமக்கு நல்வழி காட்டிய எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து 31 நாட்களாயினும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்காது உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் பங்கு பற்றி மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்:
மனைவி, பிள்ளைகள்.
01,பழம் றோட்,
கந்தர்மடம்.

(சி 978?)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 10-7-87

நயினமடு கிராமத்தை

# இராணுவம் சுற்றிவளைப்பு கடைகள் தீக்கிரை 4பேர் கைது

(ஒட்டுசுட்டான் நிருபர்)

கென்பாம், டொலர் பாம் இராணுவ முகாங்களிலிருந்து நேற்றுமுன்தினமிரவு இராணுவத்தினர் வெளியேறி நயினமடு என்னும் கிராமத்தைச் சுற்றி வளைத்துத் தேடுதல் வேட்டை நடத்தினர்.

இத்தேடுதலின் போது பலர் தாக்கப்பட்டதுடன் நால்வர் கைது செய்யப்பட்டனர். கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

இத்தேடுதல் வேட்டையின் போது மு.அமிர்தன், ம சின்னவன், ப குமார், செ.லோகநாதன் ஆகியோரே கைதுசெய்யப்பட்டு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.

அடிக்கடி இராணுவத்தினர் இப்பகுதியில் தேடுதல் வேட்டையை மேற்கொண்டு வருவதால் பெரும் பதற்றம் நிலவுகிறது.

## ரயில் விபத்து

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விலகி சுமார் 150 மீற்றர் தூரம் வெள்ளநீரில் அடிக்துச் செல்லப்பட்டு ஆற்றுநீரில் மூழ்கிய இரு பெட்டிகளிலுமிருந்த பயணிகளில் ஐம்பதுக்கும் மேற்பட்டோரே பலியானவர்களாவர்.

மேற்படி விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார். (எ)

## தரைக்கண்ணிக்கு சிப்பாய் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பில் போரைதீவு என்னும் இடத்தில் இடம் பெற்ற தரைக்கண்ணிவெடிச் சம்பவமொன்றில் விசேட அதிரடிப் பிரிவைச்சேர்ந்த பியரட்ண என்பவர் பலியானதாக அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், வெள்ளி.

நாவற்குழி முகாமிலிருந்து நேற்றும் பொதுமக்கள்வாழும் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டன. [ஒ]

## ஆலயம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னும் சிதைந்த நிலையில் கிடந்து மீட்கப்பட்டன.

இச் சடலங்களை கரவெட்டி பங்குத் தந்தை வண பிதா சகாநாயகம் அடிகளால் அப்புறப்படுத்தப்பட்டு சமய ஆராதனைகளுடன் நேற்று முன் தினம் நல்லடக்கம் செய்யப்பட்டது

கரவெட்டி திரு இருதயக் கல்லூரிக்கு எதிரேயுள்ள நேநீர்சாலை மீது இச் ஷெல்களில் ஒன்று விழுந்து வெடித்ததினுல் தேநீர்ச்சாலை முற்ருகச் சேதமடைந்துள்ளது. இதன் உரிமையாளரான ஜி தவராசாவும் பலத்த காயமடைந்துள்ளார்.

ஷெல் தாக்குதல்களின்மத்தியில் சடலங்களை அப்புறப்படுத்திக்கொண்டிருந்த வண பிதாவுக்கு அருகில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தபோதும் அவர் மயிரிழையில் உயிர் தப்பினுர். (ஒ-எ)

## "கரவெட்டி வெல்லனிற் பிள்ளையார் கோவிலுக்கு ரூபா 4 லட்சம் நஷ்டம்"

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமராட்சியில் நடந்த இராணுவ நடவடிச்கைகளின் போது கரவெட்டி வெல்லனிற் பிள்ளையார் கோயிலிற்குரிய சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக மேற்படி ஆலய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

கோயில் கட்டிடங்கள் சேதபடுத்தப்பட்டதால் சுமார் ஒருலட்சம் ரூபாவும், தேர், மஞ்சம், சப்பறம், வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டதினுல் நாற்பதினுயிரம் ரூபாவும், மற்றும் பணம் நகை உட்பட பல பொருள்கள்கொள்ளையடிக்கப்பட்டுள்ளதால் இரண்டரை லட்சம் ரூபாவும் ஆலயத்திற்கு நட்டமேற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [வா]

## ஐலனபிரைட் நேற்று வந்தது

யாழப்பாணம்,வெள்ளி

இந்திய நிவாரணப் பொருள்களை ஏற்றி வந்துள்ள 'ஐலன் பிரைட்' என்னும் கப்பல் நற்றுகாங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

சுமார் எண்ணூறு தொன் உணவுப்பொருளகளுடன் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ள இக்கப்பலிலிருந்து உணவுப் பொருட்களை இன்று இறக்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். உணவுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (வா)

## பலாத்காரம் புரிந்த நபருக்கு மரணதண்டனை

யாழ்ப்பாணம், வெள்ளி

ஆனைக்கோட்டையில் பதினெரு வயதுச்சிறுமி மீது பலாத்காரம் புரிந்த நாற்பத்தைந்து வயது நபர் ஒருவருக்கு விடுதலைப் புலிகள் நேற்று மரணதண்டனை வழங்கினுர்கள்

இந்நபர் இச்சிறுமி மீது பலாத்காரம் புரிவதற்கு முன்னரும் பல சமூக விரோத செயல்களில் ஈடுபட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்ட தாக தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## இந்திய நிவாரணம் தொடரும்

(கொழும்பு)

"வடபகுதிக்கான இந்திய நிவாரணப் பொருள் விநியோகம் ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கமைய தொடர்ந்து இடம் பெறும்" என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் திரு.ஜே.என்.டிக்ஸிட் கூறினுர். (எ)

## 'யாழ் மக்களுக்கு உதவுவதே எமது நோக்கம்"- இந்திய பிரதிநிதி

(மாவிட்டபுரம் நிருபர்)

"மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் வாழும் யாழ். மக்களுக்கு உதவி செய்வதே எமது நோக்கம. இது விடயத்தில் வேறு எந்த தவருன உள்நோக்கமும் கிடையாது.''

இவ்வாறு இணுவில் அகதிகளுக்கு இந்திய நிவாரணப் பொருள்கள் வழங்கிய வைபவத்தில் கலந்து கொண்ட இந்திய செஞ்சிலுவை சங்க பிரதிநிதி திரு.சார்க் கூறினுர்.

இணுவில் பொது நூலகத்தினரால் பராமரிக்கப்பட்டு வரும் 52 அகதிக் குடும்பங்களுக்கு மேற்படி நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இவ்வைபவத்தில் வலி தெற்கு உதவி அரச அதிபர் ஆ மகாலிங்சம், சுன்ஞகம் ப.நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் எம். குமாரவேல், இணுவில் பிரஜைகள் குழுச் செயலாளர் தி. சி. சண்முகலிங்கம், கிராமசேவையாளர் எஸ். சச்சிதானந்தம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கொழும்பு நகரில்—

## கார் கடத்தல்களில் ஈடுபட்ட பௌத்த பிக்கு கைது!

[கொழும்பு]

கொழும்பில் கார் கடத்தல் வேலைகளில் ஈடுபட்டுவந்த கும்பலொன்றின் தலைவரான பௌத்த பிக்கு ஒருவர் பொலிஸாரினுல் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலும் அதைச்சுற்றியுள்ள பகுதியிலும் கடந்த சில மாதங்களாக கார்க்கடத்தல் அதிகரித்து வந்ததுடன் கடத்தப்படும் கார்கள் வெளிமாவட்டங்களில் விற்பனை செய்யப்படுவதாகவும் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்திருந்தது.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல்நடவடிக்கை ஒன்றில் போலித் துப்பாக்கி ஒன்றுடன் கடத்தப்பட்ட கார் ஒன்றை செலுத்திச் சென்ற புத்த பிக்கு ஒருவர் நேற்றுமுன் தினம் பொலிஸாரினுல் கைது செய்யப்பட்டார்.

மேற்படி கடத்தல் குழுவைச் சேர்ந்த சில புத்த பிக்குகள் உட்பட பலர் தற்போது தேடப்பட்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி)

வடமராட்சி க. பொ. த. உயர்தர

## பரீட்சை நிலையங்கள் புத்தூரில் அமையும்?

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமராட்சிப் பகுதியிலுள்ள க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை நிலையங்கள் புத்தூர் பகுதியில் அமைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுவருவதாக தெரியவருகிறது

இதுதொடர்பாக இம்மாதம் 13-ம் திகதி நடைபெறவுள்ள உயர்மட்டக்கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ளது.

மேலும் வடமராட்சியில் சகல பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளதால் இப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி பத்திரங்கள் யாழ் கல்வித்திணைக்களத்தில் வைத்து வழங்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

## மரண அறிவித்தல்

### தம்பையா சோமசுந்தரம் (சின்னச்சாமி)

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைக் சேர்ந்த தம்பையா சோமசுந்தரம் (சின்னச்சாமி காலமானுர். அன்னுர் தங்கம்மாவின் அன்புக் கணவரும் செந்தில்முருகன், இலட்சுமணன் (பிரான்ஸ்), டாக்டர் விஜயலட்சுமி (கொழும்பு தெற்கு வைத்தியசாலை), தனலெட்சுமி ஆகியோரின் அன்புத் தகப்பனுரும், சுமதி, ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமனுரும், இராஜவர்மன், ரமணன், சகிலா ஆகியோரின் பேரனும், நாகம்மா, தங்கம்மா, சண்முகநாதன் (பிரதம பொறியியலாளர், மின்சாரசபை, மலேசியா) ஆகியோரின் அன்புச்சகோதாருமாவார். அன்னுரது இறுதிக்கிரியை இன்று (10-7-87) வெள்ளிக்கிழமை நண்பகல் 1 மணிக்கு பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு இல்லத்தில் நடைபெறும்.

(சி 9;84) தகவல்: கே. செந்தில்முருகன்

### திருமதி பொன்னம்மா கனகசபை

[உரிமையாளர் யப்பான் ஜுவலர்ஸ், யாழ்ப்பாணம்]

திருமதி பொன்னம்மா கனகசபை காலமானுர். அன்னுர் காலஞ்சென்ற யப்பான் கனகசபை அவர்களின் அன்பு மனைவியும், லோகநாதன் [உலக வங்கி வாஷிங்டன்], விஜயலெட்சுமி ஆகியோரின் அருமைத் தாயாரும், நகுலாம்பிகை, ஆறுமுகம் [Scotland] ஆகியோரின் அன்பு மாமியாரும், ரவீந்திரன், ராதா, ராஜேந்திரன், சித்திரா, ராஜ்குமார் சியாமளா ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சிவபாக்கியம், சுப்பிரமணியம் [லண்டன்] ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற குருநாதன், கணபதிப்பிள்ளை, சின்னப்பிள்ளை, தம்பிப்பிள்ளை, கதிரவேலு, செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று [10-7-87] வெள்ளிக்கிழமை அன்னுரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக காலை 9 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

க. லோகநாதன்.

64, கன்னுதிட்டி ரோட்,
யாழ்ப்பாணம். [சி 9775]

## வடமராட்சியைச்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை சுற்றிவளைத்தபொலிசார் அறைகளில் துயின்றுகொண்டிருந்தவர்களை தட்டி எழுப்பி, முகமூடியொன்றின்முன் நிறுத்தியதாகவும், இந்த முகமூடி தலையசைத்த 17 பேரை பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணைக்காகத் தடுத்து வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுள் 3 பெண்களும் அடங்குவர்.

தடுத்துவைக்கப் பட்டிருப்பவர்களுள் சிலர் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு செல்லவும், மற்றும் பலர் பாதுகாப்புக்கருதியும் வந்திருந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது. (மா)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜுலை மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.

கிழக்கு மாகாண மக்களின்

## துயரங்களுக்கு இந்தியா நடவடிக்கைஎடுக்கவேண்டும்

– கூட்டணி வேண்டுகோள்

(சென்னை)

கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை இந்திய அரசு ஆழ்ந்து கவனித்து அம் மக்களின் துயர் துடைக்க தக்க நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொலிட் பீரோ இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்திக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் யொன்றில் இதனை குறிப்பிட்டுள்ள கூட்டணி பொலிட் பீரோ மேலும் அப்பகுதியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளினுல் மக்கள் பெரும் பட்டினி நிலைக்குளளப்பட்டுள்ளனர். காஞ்சிதள்மடு கோயில் படுகொலை பற்றி அறிய அப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்ட ராஜதந்திரிகளும், வெளிநாட்டு பத்திரிகையாளரும் கூட இச் சம்பவம் பற்றி விசாரித்தறிய அனுமதிக்கப்படவில்லையென்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

## பறிமுதல்

யாழ்ப்பாணம், வெள்ளி

கரவெட்டியில் நேற்றுமேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் உதயன் என்பவர் காயடைந்தார்.

இவரை ஏற்றிச்சென்ற மாட்டுவண்டிலை மந்திகை ஆஸ்பத்திரி அருகில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் மறித்து முகாமில் நிறுத்தியுள்ளனர். (ஒ)